# யா / கொக்குவில் இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம்

## முதலாந் தவணைப்பரீட்சை - 2018

| தரம் - 07 | குடியியற்கல்வி | நேரம் : 2 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் :- ......................

### பகுதி I

❖ மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. மனிதன் முதன் முதலில் அங்கத்துவம் பெறும் சமூக அலகு
    1) பாடசாலை 2) குடும்பம் 3) கிராமம் 4) சமூகம்

02. பல குடும்ப அலகுகள் ஒன்றிணைவதால் தோன்றுவது
    1) குடும்பம் 2) நாடு 3) சமூகம் 4) பாடசாலை

03. கருக்குடும்பத்தின் இயல்புகளில் ஒன்று
    1) பாட்டன் பாட்டி காணப்படும்.
    2) பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்படும்.
    3) பெற்றோரின் அன்பு அரவணைப்பு மட்டும் காணப்படும்.
    4) மூன்று தலைமுறைக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் காணப்படுவர்.

04. ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய பண்புகளில் மிகவும் பிரதானமானது
    1) விருப்பம் 2) குறிக்கோள் 3) சுயநலம் 4) தேவை

05. உலகிலுள்ள ஒவ்வொருவரும் ஒருவரிலிருந்து மற்றவர் வேறுபட்டவர் என்பதைப் புலப்படுத்தும் அம்சம்
    1) திறமை 2) நிறம் 3) கைரேகை 4) குணம்

06. வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அவசியமாக அமையாதது
    1) குடும்பம 2) வணிக நிறுவனங்கள்
    3) நல்ல நண்பர்கள் 4) பாடசாலை

07. சிறந்த நண்பன் ஒருவர் கொண்டிருக்கக் கூடாத பண்பு?
    1) நல்லறிவுடன் செயற்படல் 2) நல்லன தீயனவற்றை சுட்டிக்காட்டல்
    3) தீயபழக்கவழக்கங்களை கொண்டிருத்தல் 4) வழிகாட்டல்களை மேற்கொள்ளல்.

08. நாட்டுக்குப் பொருத்தமான பிரசைகளை உருவாக்குவதில் பெரும் பங்காற்றுவது
    1) குடும்பம் 2) பாடசாலை 3) ஆலயம் 4) ஊடகங்கள்

09. பின்வருவனவற்றுள் மனவெழுச்சி அல்லாதது

1) மகிழ்ச்சி 2) அன்பு 3) அழுகை 4) கோபம்

10. கவலைப்படும் சந்தர்ப்பம் ஒன்றில் வெளிப்படுத்தப்படும் நடத்தை

1) சிரித்தல் 2) ஆடுதல் 3) துள்ளிப்பாய்தல் 4) அழுதல்

11. நற்பண்புகளுக்கு வித்திடக்கூடிய விடயங்களை வாசிக்கத்தக்க முன்மாதிரியான விடயம் எது?

1) விளம்பரச் செய்திகள் 2) குறு நாவல்கள்

3) பெரியோரின் வரலாறு 4) சினிமாச் செய்திகள்

12. நற்பிரஜை ஒருவரிடம் காணப்படும் பண்பு

1) சுயநலம் 2) பொறாமை 3) கோபம் 4) நட்புறவு

13. சிறந்த பொருள் ஒன்றை கொள்வனவு செய்யும் போது கருத்தில் கொள்ள வேண்டிய விடயம்

1) விலை 2) தரம் 3) வடிவம் 4) சுவை

14. தொழிலொன்றின் மூலம் பெற்றுக்கொள்ள முடியாதது

1) வருமானம் 2) சமூக அந்தஸ்து

3) அன்பு அரவணைப்பு 4) தேவைகளைப் பூர்த்தி செய்தல்

15. உங்களுக்குரிய உரிமையாகக் கருதப்படக்கூடியது

1) அன்பு செலுத்துதல் 2) கருணை காட்டுதல்

3) மகிழ்ச்சிகரமான சூழலில் வாழ்தல் 4) பெரியோரை மதித்தல்

16. பெற்றோருக்குரிய கடமையொன்றாக அமையாதது

1) குடும்ப உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்கல்.
2) உணவுத்தேவையை நிறைவேற்றுதல்.
3) சட்டரீதியற்ற தொழில் மூலம் பணம் சம்பாதித்தல்.
4) குடும்ப விடயங்களில் சரியான முடிவுகளை எடுத்தல்.

17. அயலவர்களுடன் நட்புறவைப் பேணும் சந்தர்ப்பம்

1) தொழிலிடம் 2) பயணம் செய்யும் போது

3) சிரமதான வேலைகளின் போது 4) குழந்தைக்கு உணவு ஊட்டும் போது

18. உங்கள் தந்தையின் தம்பியின் மகள்

1) தங்கை 2) தம்பி 3) மச்சான் 4) மச்சாள்

19. உறவினர் தொடர்பான அன்பு, மரியாதை, பாசம் என்பவற்றை வெளிப்படுத்தும் பாடல்
1) தாலாட்டுப்பாடல் 2) தொழிற்பாடல் 3) பக்திப்பாடல் 4) சினிமாப்பாடல்

20. சுட்டுத் துண்டொன்றில் பொருள் தொடர்பான விபரங்களைக் குறிப்பிடுவது
1) அழகிற்கு 2) பொருள்பற்றிய தகவலைப் பெற
3) பொழுதுபோக்கிற்கு 4) மேற்கூறிய யாவும்

(20X1=20 புள்ளிகள்)

## பகுதி II

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01)
1) குடும்ப உறுப்பினர்களின் தன்மைக்கேற்ப குடும்பங்களை வகைப்படுத்துக.
2) கருக்குடும்பம் 03 என்றால் என்ன?
3) குடும்பம் ஒன்றில் காணப்படும் சிறப்பம்சங்கள் 4 தருக?
4) குடும்பம் ஒன்றில் அங்கத்தவராக காணப்படுவதால் நீர் பெற்றுக் கொள்ளும் நன்மைகள் 4 தருக?

02)
1) குடும்ப அங்கத்தவராக இருக்கும் உங்களுக்குள் விருத்தி செய்ய வேண்டிய பண்புகள் 3 தருக?
2) தற்காலத்தில் தனிக்குடும்பங்கள் அதிகளவில் காணப்படுவதற்கான காரணங்கள் 3 தருக?
3) வாழ்க்கையின் குறிக்கோள் என்பதனால் கருதப்படுவது யாது?
4) உமது குறிக்கோள் "பாடசாலை மாணவ தலைவராகத் தெரிவு செய்யப்படல்" எனின் நீங்கள் நடைமுறைப்படுத்த வேண்டிய செயற்பாடுகள் எவை?

03)
1) ஒவ்வொரு மனிதனுக்கும் வித்தியாசமாக அமையும் சுய அடையாளங்கள் எவை?
2) உங்களிடம் காணப்படும பலம், பலவீனம் என்பவற்றை பட்டியற்படுத்துக?
3) வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அவசியமாக காணப்படும் விடயங்கள் எவை?
4) பாடசாலை ஒன்றின் மூலம் ஆற்றப்படும் செயற்பாடுகள் 3 தருக?

04)
1) ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாக மாற்ற ஈடுபடும் செயற்பாடுகள் 3 தருக?
2) அழகியற் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் பெற்றுக்கொள்ளும் பயன்கள் 3 தருக?
3) விளையாட்டில் ஈடுபடும் ஒருவரிடம் விருத்தியடையும் பண்புகள் எவை?
4) நடைமுறையிலுள்ள குடும்ப அங்கத்தவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் 3 தருக.

05)

1) மனவெழுச்சிகள் 3 குறிப்பிட்டு அவற்றுக்கான நடத்தை வெளிப்பாடுகளையும் தருக?
2) கொள்கலன்களில் அடைக்கப்பட்ட உணவுப்பொருள் ஒன்றில் அவதானிக்க வேண்டிய விடயங்கள் 3 தருக?
3) அயலவர்களுடன் நட்புறவைப் பேணும் சந்தர்ப்பங்கள் 3 தருக?
4) இலங்கையில் காணப்படும் பல்வேறு இனங்களையும் அவற்றுக்குரிய மதஸ்தாபனங்களையும் குறிப்பிடுக.

# GRADE 6,7,8

# STUDY WITH US..!

# SCIENCE

## ONLINE CLASSES

**இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.**

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
| --- | --- |
| 850/= Monthly | 1000/= Monthly |



**Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.**

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page